# வேலணை மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் வரலாறுபடைத்த ஒன்றுகூடல்!



சங்கத்தலைவர் திரு. பொன் பஞ்சலிங்கம்




பிரதம விருந்தினர் Dr. சிவா கோபால் (கோபாலபிள்ளை) அவர்கள்



விழாத் தலைவர் திரு.சி. சிவராமலிங்கம்

வேலணை மத்திய மகா வித்தியாலயப் பழைய மாணவர் சங்கத்தின் ஐந்தாவது வருடாந்த ஒன்றுகூடல் கடந்த 22-07-2000 சனிக்கிழமையன்று வெகுசிறப்பாக நடைபெற்றது. அன்றைய தினம் நண்பகல் 12 மணிக்கு **Sunny-Brook** பூங்காவின் **Area 1** பகுதியானது கலகலப்பாகவும் கவர்ச்சியாகவும் காணப்பட்டது.

ஆண்களும் பெண்களும் சிறுவர்களுமாக மைதானம் நிறைந்து காணப்பட்டது.கோடைகால இயற்கை புதுமெருகூட்டியதுடன் இலககள் பட்டாம்பூச்சிகளாகப் பறந்து திரிந்தது பார்வைக்கு இதமளித்தது.

தமது வளர்ச்சிக்கு அடித்தளமாக இருந்த கல்லூரித்தாயை நினைவு கூருமுகமாக வேலணை மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்களும் முன்னாள் ஆசிரியர்களும் நலன் விரும்பிகளும் அவர்களது குடும்பத்தினரும் ஒன்று கூடியிருந்தனர். உறவு



சங்கத்தின் காப்பாளர்களில் ஒருவரான திரு.சி. மோகனச்சந்திரன்

களைப் புதுப்பிப்பதாகவும்உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதாகவும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதாகவும் ஒன்றுகூடி உண்டு மகிழ்வதாகவும் இவ்வைபவம் அமைந்தது குறிப்பிடத்தக்கது. வேலைப் பழுவால் வேதனைப்படுபவர்களுக்கு இத்தகைய விழாக்கள் தெம்பும் உற்சாகமும் அளிப்பதை உணரக்கூடியதாக இருந்தது. இந்த ஒன்றுகூடல் விழாவானது பங்குபற்றிய அனைவரையும் எமது கல்லூரியின் விளையாட்டு மைதானத்திற்கு அழைத்துச் சென்றதுடன் எமது கல்லூரிக்கால பசுமையான நினைவுகளை இரை மீட்க வைத்தது என்று கூறின் மிகையன்று. அத்துடன் வருண பகவானும் சிறிதுசிறிதாக மழைத் துளிகளைத் தெளித்து எமது கல்லூரி அன்னையின் சார்பில் வாழ்த்துக்கூறியது போல் அமைந்தது அனைவரையும் சிறிது நேரம் மெய்சிலிர்க்க வைத்தது.

மதியம் 12.30 மணிபோல் விளையாட்டுப்போட்டிகள் ஆரம்பமாகின. சிறுவர்களும் சிறுமியர்களும் உற்சாகத்துடன் பங்குபற்றித் தமது ஆற்றலை வெளிப்படுத்தினர். சிறுவர்களுக்காகப் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இந்நிகழ்ச்சிகள் அனைத்திலும் அனைவரும் விருப்பத்துடனும் ஆர்வத்துடனும் பங்குபற்றியமை மட்டுமல்லாது போட்டிகள் விறுவிறுப்பாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இளைஞர்களுக்கும் முதியவர்களுக்கும் பெண்களுக்குமாகச் சில நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. விரைவு நடையில் முதியவர்கள் இளைஞர்களாகவே காணப்பட்டனர். சங்கீதக் கதிரைப் போட்டியில் பெண்கள் உற்சாகம் பொங்கிக் காணப்பட்டனர். வழக்கத்திற்கு மாறாக இம்முறை ஆண்களுக்கான கயிறு இழுவைப் போட்டியில் 9 குழுக்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கதுடன் போட்டி பலப்பரீட்சையாகவே அமைந்தது எனலாம். போட்டிகளுக்கு நடுவர்களாகச் செயற்பட்ட திரு.தனபாலசுந்தரன் ஆசிரியர் அவர்களும் திரு.ஜீவன் அவர்களும் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளராகச் செயற்பட்ட திருமதி ஞானவல்லி தனபாலசுந்தரன் ஆசிரியை அவர்களும் அறிவிப்பாளராகச் செயற்பட்ட திரு.சி.திருச்செல்வன் அவர்களும் மற்றும் அவர்களுக்கு உதவிய அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.




கயிறு இழுவைப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுடன் சங்கத்தின் பொருளார் திரு. சி. பூலோகபூரணன்

விளையாட்டுத்திடல் வீரனையும் தீரனையும் சாதனையாளனையும் சமைத்து விடுகின்றது என்பதற்கேற்பவும் விளையாட்டுக்கள் பல நல்ல பண்புகளை அதாவது தலைமைத்துவம். சேர்ந்து கருமமாற்றுதல். தோல்வியை ஏற்றல். மீண்டும் முனைதல் ஆகிய பண்புகளை வளர்ப்பதை இவ்விழா நினைவுறுத்தியது என்று கூறின் மிகையல்ல.

தீவக இளைஞர்கள் எதிர்காலத்தில் கனடாவில் சாதனை புரிவார்கள் என்பது இவ்விழாவின் மூலம் நிதர்சனமாயிற்று என்றேகூற வேண்டும். அறிவு ஒருவனுக்கு அத்தியாவசியமானது. அந்த அறிவை எமக்களித்த எமது கல்லூரித் தாயையும் ஆசிரியர்களையும் நாம் வாழ்வில் மறந்துவிடலாகாது. நாம் நமது கல்லூரிக்கு நன்றிக் கடன் செலுத்தவேண்டும். செய் நன்றி கொன்ற மகற்கு உய் வில்லை- எனவே அறிவு சுடர்விட்டுப் பிரகாசித்தாலும் அது பண்பு என்னும் சட்டத்துள் அடக்கம் பெற்றால்தான் ஒருவனுக்கும் வீட்டிற்கும் நாட்டிற்கும் அதனால் பயன் ஏற்படும். 'பண்புடையார் பட்டுண்டு உலகு' என்பது வள்ளுவர் வாக்கு. எனவே சிறார்கள் அறிவைப் பெறுவதுடன் பண்புடைய மக்களாக வாழப் பழகிக் கொள்ளவேண்டும் என விழாவிற்குத் தலைமை வகித்த பழைய மாணவரும் முன்னாள் ஆசிரியருமான திரு.க. சிவராமலிங்கம் அவர்கள் குறிப்பிட்டார். பொதுவாகத் தீவக மக்களின் உயற்சிக்கும் குறிப்பாக வேலணை மாணவர்களின் வளத்திற்கும் அயராது உழைத்தவர் அதிபர் தம்பு அவர்கள். மாணவர்களுக்குத் தெம்பு தந்து அவர்களது உயற்சிக்கு



ஒன்றுகூடலில் கலந்துகொண்டவர்களில் ஒருபகுதியினர்

தெம்புகோலாக இருந்தவர் அவர். ஏழ்மைக் குடும்பங்களைச் சேர்ந்த தீவக மாணவர் பலர் அரச உத்தியோ கங்களில் அமர அவரே அடிப்படைக் காரணம். எனவே அதிபர் தம்பு புலமைப் பரிசில் நிதியத்திற்கு வருடம் ஒருமுறையாவது வெளிநாடுகளில் பழைய மாணவர்கள் கட்டாயம் உதவ வேண்டும் எனக் கேட்டுக்கொண்டதுடன் கடந்த இரண்டு வருடங்களாக இந்த நிதியத்திற்கு உதவி புரிந்து வரும் இச்சங்கத்தினரின் செயற்பாடுகள் மிகவும் மெச்சத் தக்கது எனவும் பாராட்டினார். இங்குள்ள பழைய மாணவர் சங்கத்தினர் தொடர்ந்தும் வெளிநாடுகளில் வாழும் பழைய மாணவர்களுக்கு முன்னுதாரணமாகச்



சிறப்பு விருந்தினரும் பிரான்ஸ் கிளையின் தலைவருமான திரு. நா. மகேந்திரன்

செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.



சங்கத்தின் செயலாளர் திரு.க. இளந்திரையன்

வரவேற்புரை நிகழ்த்திய சங்கத்தலைவர் திரு.பொன் பஞ்சலிங்கம் அவர்கள் சங்கத்தின் பல தரப்பட்ட பணிகளை எடுத்துக்



விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியை திருமதி ஞானவல்லி தனபாலசுந்தரன்

கூறியதுடன் கல்லூரியின் பெருமையை நிலைநாட்டுவதற்கு எல்லோரும் ஒருமனத்துடன் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டதுடன்

18ம் பக்கம் பார்க்க.....